# அகநகநட்பூத்த முகநூல் நட்பு

நூல் வரிசை 1

## கா.சு.வேலாயுதன்


மாரியப்பன்


ரத்னவேல்


காம்கேர் புவனேஷ்வரி


கோ. வசந்தகுமாரன்


கார்த்திக்குமார்


துள்ளுக்குட்டி


ரதன் சந்திரசேகர்


கீழை அ.கதிர்வேல்


கஸ்தூரிராஜி சுப்பிரமணியம்


அன்னக்கொடி


கே.சரவணன்


மணிமாறன்


பொன்னுசாமி


அம்சா


ராஜாராம்



பிளாக்கிங்


கரீம்


வேனில் கிருஷ்ணமூர்த்தி


பிஸ்மி பரிணாமன்


பி. கோவிந்தராஜ்

**நூலின் பெயர்**

# அகநகநட்பூத்த முகநூல் நட்பு

*மிக சுவாரஸ்யமான இ-புத்தகம்*

**நூலாசிரியர்**

**கா.சு. வேலாயுதம்**

*மூத்த பத்திரிகையாளர், எழுத்தாளர், ஊடகவியாளர்*

**வாங்கும் தளம்**

*அமேசான்*

## அகநக நட்பூத்த முகநூல் நட்பு: 3

## காம்கேர் கே. புவனேஸ்வரி (Compcare K Bhuvaneswari)

---

ஆச்சர்யமாக இருக்கிறது. ‘இந்த நாள் இனிய நாள்’ என்ற தலைப்பில் நாளொரு அனுபவக் கட்டுரைகளை அப்பழுக்கின்றி எழுதி வருகிறார் இவர். இவரின் முகநூல் பக்கங்களில் சில வாரங்களுக்கு முன்புதான் சென்றேன்.

இன்றைக்கு பத்தாண்டுகளுக்கு முன்பு நான் முகநூல் பக்கங்களில் வந்தவேளை. தகவல்களை கட்டுரைகளாக எழுதும் போது என் நண்பர்கள் பலர், ‘முகநூலில் இவ்வளவு பெரிசா எழுதாதீங்க. யாரும் படிக்க மாட்டாங்க. சொல்ல வர்றதை நறுக்குனு ஓரிரு வரியில சொல்லுங்க. அப்பத்தான் பிரண்ட்ஸ் நிறையபேர் சேருவாங்க!’ன்னு சொன்னார்கள்.

அப்போது என் நட்பில் என் கட்டுரைக்கு ஓரிருவர் வந்து லைக் குறியிட்டால் அதிசயம். கமெண்ட் போட்டால் அதை விட அதிசயம். ஆயினும் நான் எழுதும் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. இப்போது ஒரு புகைப்படத்திற்கு நானூறு பேர் லைக், ஹார்ட்டின் குறியிடுவது ஆச்சர்யமில்லை. பெரிய கட்டுரைகளையும் நூறு, இருநூறு பேர் வாசித்து பெரிய அளவில் ‘கமெண்ட்ஸ்’ போடுவதுதான் பேராச்சர்யம். அதிலும் ஆச்சர்யம் என்னவென்றால் என்னை விட அதிகமாய் நண்பர்கள் எழுதுகிறார்கள்.

அதிலும் இந்த காம்கேர் புவனேஸ்வரி ஐ.டி துறையில் இருந்து கொண்டு தன் அனுபவங்களை சளைக்காமல் கட்டுரைகளாக எழுதி

232 நாட்களாக தொடர்கிறார் என்றால் அதை விட பேராச்சர்யத்தில் ஆச்சர்யம் வேறென்ன இருக்க முடியும்.

அதை விட இவர் தன் தாய்மொழி தமிழை நேசிக்கிறார். தனக்கு கல்வி கற்பித்த தமிழாசிரியர்களை பேணுகிறார் என்பதை விட சிறந்த சமூகத்தின் குறியீடு வேறென்ன வேண்டும். இவரை குறுகின காலத்தில் நட்பாக்கிக் கொண்டதில் மகிழ்கிறேன்.(இவரும் எனக்கு நேரில்/போனில் அறிமுகமில்லை)

கா.சு. வேலாயுதன்

## நூலாசிரியர் கா.சு. வேலாயுதன் குறித்து காம்கேர் கே. புவனேஸ்வரி

ஃபேஸ்புக்கிலும் இவரது பிளாகிலும் 'அக நக நட்பூக்கும் முகநூல் நட்புகள்' என்ற தொடர் மூலம் தன் நட்புகள் குறித்து ஆத்மார்த்தமாக எழுதிவருகிறார்.

எழுதுவது ஒன்றும் அதிசயமல்ல. ஆனால், இவர் இப்படி தொடர்ச்சியாக எழுதுவதற்கு சென்ற வருடம் முழுவதும் நான் எழுதி வந்த ‘இந்த நாள் இனிய நாள்’ பதிவுகளே உந்துதலாக இருந்தது என கொஞ்சமும் ஈகோ இல்லாமல் பரந்த மனப்பான்மையுடன் குறிப்பிட்டிருந்தார். இவரை எனக்கு இதற்கு முன்னர் அறிமுகம் கிடையாது. போனிலோ அல்லது நேரிலோ பேசியதும் கிடையாது.

ஓர் அனுபமிக்க எழுத்தாளர், மூத்த பத்திரிகையாளர், தொடர்ச்சியாக இயங்கிவரும் ஊடகவியாளர் வேறு துறை சார்ந்த ஒருவரின் கிரியேட்டிவிட்டியை மனதாரப் பாராட்டுவது என்பது அவரது பரந்த மனப்பான்மையையே காட்டுகிறது. என்னைப் பாராட்டியதற்காக

பிரமிக்கவில்லை. ஈகோ எதுவுமின்றி பிறரை அங்கீகரிக்கும் இவரது பண்பைக் கண்டு இன்றளவும் பிரமிக்கிறேன்.

---***---